ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

**செய்தி அறிக்கை**

## இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் முரண்பாட்டுத்தீர்வுக் குழு தலைவராக சாம் விஜேசிங்க மீண்டும் தெரிவு

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் முரண்பாட்டுத்தீர்வுக் குழுவின் தலைவராக இலங்கையின் முதல் குறைகேள் அதிகாரியும் ஓய்வுபெற்ற பாராளுமன்ற செயலாளர் நாயகமுமான சாம் விஜேசிங்க மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அண்மையில் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு அணைக்குழுவின் செயலகத்தில் நடைபெற்ற விசேட பொதுக் கூட்டத்தில் அவரை மீண்டும் தெரிவு செய்வதென்று முடிவு செய்யப்பட்டது.

திரு விஜேசிங்க 2003 ஆம் ஆண்டில் இருந்து முரண்பாட்டுத்தீர்வுக் குழுவின் தலைவராக இருந்து வருகின்றார்.

பத்திரிகைகளுக்கும் வாசர்களுக்குமிடையிலான முரண்பாடுகளை சமாதானப்படுத்தல் வழிமுறையூடாக தீர்க்க முடியாதவிடத்து இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு அணைக்குழுவின் முரண்பாட்டுத் தீர்வுக்குழுவானது இணக்கசபைச் சட்டத்தின் அடிப்படையில் மத்தியஸ்த தீர்வு வழிமுறையின் கீழ் தீர்த்துவைக்கும் பணியை மேற்கொண்டு வருகின்றது. இந்த முரண்பாட்டுத் தீர்வக்குழுவில் 11 அங்கத்தவர்கள் இடம்பெறுகின்றனர். அவர்களில் 5 பேர் சிவில் சமூகத்தைச் சேர்ந்த கல்விமான்களாகவும் 5 பேர் ஊடகத்துறையைச் சேர்ந்தவர்களாகவும் இருந்து வருவதோடு தலைவர் பத்திரிகைத்துறையைச் சாராதவராகவும் இருந்து வருகின்றார்.

பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவானது பத்திரிகைத்துறையினரால் உறுவாக்கப்பட்ட சுயகட்டுப்பாட்டு ஒழுக்கக்கோவைப் பொறிமுறையை அடிபப்டையாகக் கொண்ட தொழிற்பாடாகும். இந்த ஆணைக்குழுவானது சட்டத்தின் மூலம் பத்திரிகையாளர்களை தண்டிக்கவும் சிறையிடவும் அதிகாரம் கொண்ட பத்திரிகைப் பேரவைக்குப் பதிலாக 2003 ஆம் ஆண்டு ஏற்படுத்தாப்பட்டதாகும். பத்திரிகைத்துறையினருக்கான சுயகட்டுப்பாட்டு ஒழுக்கக்கோவை பொறிமுறையானது பத்திரிகை ஆசிரியர் சங்கத்தால் 2003 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டதாகும்.

வாசகர்களுக்கு பத்திரிகைகளுடன் பிணக்குகள் இருப்பின் முதலில் அதனை குறிப்பிட்ட பத்திரிகையின் ஆசிரியருக்கு அறிவிக்கலாம். அப்பத்திரிகை குறிப்பிட்ட முறைப்பாடு தொடர்பாக போதிய கவனம் செலுத்தத்தவறின் அவ்விடயம் தொடர்பாக இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம். இந்த ஆணைக்குழுவின் பணியானது முற்றிலும் இலவசமானதாகும்.

2003 ஆம் அண்டில் இருந்து இன்றுவரையில் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவானது 792 முறைப்பாடுகளைப் பெற்று விசாரணை செய்து தீர்வுகளை வழங்கி வந்திருக்கின்றது.

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவானது இலங்கை பத்திரிகை வெளியீட்டாளர் அமைப்பு, இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம், சுதந்திர ஊடக அமைப்பு, உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பு, தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், ஸ்ரீ லங்கா முஸ்லிம் ஊடகவியலாளர் அமைப்பு மற்றும் ஊடக தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனம் அகியவற்றின் ஆதரவைப் பெற்றதாகும்.